DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.I, Mayiladuthurai.

CC.NO.57/2025

Deposition of Lw1 examined as PW1 Date: 04.11.2025

| | |
|---|---|
| Name | அனிதா |
| Father's/Husband's Name | கோபி |
| Village | மயிலாடுதுறை |
| Taluk | |
| Age | 39/25 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 04.11.25

(Accused present)

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வீட்டு குடித்தனம் செய்து வருகிறேன். 1 ம் எதிரி எனது கணவர் ஆவார். 2ம் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 14.03.2010 ம் தேதி அன்று 1ம் எதிரி கோபிக்கும், எனக்கும் மயிலாடுதுறையில் கணேசா திருமண மண்டபத்தில் திருமணம் நடந்தது. திருமணத்தின் விளைவாக எனக்கு 2 பெண் குழந்தைகள் உள்ளனர். எனது முதலாவது மகள் காயத்ரி 10 ம்வகுப்பு படித்து வருகிறார். இரண்டாவது மகள் ஆருதி ஸ்ரீ 6ம் வகுப்பு படித்து வருகிறார். எனது கணவர் வெளி நாட்டில் வேலை செய்து வந்தார். அவ்வப்போது வீட்டிற்கு வந்து விட்டு வெளிநாட்டிற்கு சென்று வேலை பார்த்து வந்தார். எனது கணவர் எங்கள் தெருவில் வசிக்கும் கார்த்திகேயன் மனைவி ரூபலோசினி என்பவருடன் கள்ளத்தொடர்பு வைத்திருந்தார். எனது கணவருடன் உடன் பிறந்தவர்கள் 3 அக்கா, 1 தங்கை மற்றும் 3 அண்ணன்களும் உள்ளனர். நானும் எனது கணவருடன் உடன் பிறந்தவர்களும் எனது கணவரை கள்ளத்தொடர்பு வைத்திருப்பது தொடர்பாக கண்டித்தோம். அவர் என் மீது கோபம் கொண்டு 2ம் எதிரி ரூபலோசினியுடன் மூவலூரில் தனியாக இருந்து வருகிறார். நான் எனது கணவர் வீட்டில் எனது இரண்டு குழந்தைகளுடன் இருந்து வருகிறேன்.

எனது கணவர் எனக்கும், எனது குழந்தைகளுக்கும், செலவிற்கும் பணம் எதுவும் கொடுக்கவில்லை. மேலும் எங்களை அவர் பராமரிக்கவும் இல்லை. அதனால் நான் ஜீவனாம்ச வழக்கினை மயிலாடுதுறை சார்பு நீதிமன்றத்தில் மனு எண் 112/2023 ஆக என் கணவர் மீது தாக்கல் செய்தேன். மேற்படி ஜீவனாம்ச வழக்கானது இன்னும் நிலுவையில் இருந்து வருகிறது. 2022 ம் ஆண்டு முதல் எனது கணவரும் 2ம் எதிரி ரூபலோசினியும் எங்களுக்கு பல்வேறு விதமான தொந்தரவுகளை கொடுத்து வந்தார்கள். அதனால் நான் குத்தாலம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். அந்த வழக்கும் விசாரணையில் நிலுவையில் உள்ளது. 02.10.2024 ம் தேதி அன்று நானும் எனது குழந்தைகளும் வீட்டில் இருந்தபோது மதியம் 01.00 மணி அளவில் எனது கணவரான 1ம் எதிரியும், 2ம் எதிரி ரூபலோசினியும் வீட்டிற்கு வந்து வீட்டை விட்டு வெளியே போடி என்று கையால் என்னை அடித்தார்கள். நான் போக முடியாது என்று சொன்னேன். உடனே 2ம் எதிரி ரூபலோசினி, அனிதா உயிரோடு இருக்கும் வரை நாம் சேர்ந்து வாழ முடியாது என்று கூறி இவளை உயிரோடு விடக்கூடாது என்று மிரட்டினார். எனது கணவர் மீண்டும் என்னை கையால் அடித்தார். நானும் எனது குழந்தைகளும் கத்தினோம். நாங்கள் அலறும் சத்தத்தை கேட்டு எனது நாத்தனார் வளர்மதி வந்து எதிரிகளிடம் ஏன் இவ்வாறு அடிக்கிறீர்கள் என்று கேட்டு கொண்டிருந்தார். நான் வீட்டில் உள்ள பாத்ரூமிற்கு சென்று அங்கிருந்த

Sd/ அனிதா.

பினாயிலை எடுத்து எனது கணவர் மற்றும் 2ம் எதிரி ரூபலோசினியின் கொடுமை தாங்க முடியாமல் குடித்து விட்டேன். எனது கணவர் மற்றும் 2ம் எதிரி ரூபலோசினியும் வீட்டை விட்டு வெளியே ஓடி விட்டனர். என்னை 108 ஆம்புலன்ஸ் மூலமாக எனது நாத்தனார் வளர்மதியும், எனது கொழுந்தனார் மகன் கோகுல கிருஷ்ணனும் சிகிச்சைக்காக மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சேர்த்தார்கள். சிகிச்சையில் இருந்தபோது போலிசார் என்னை விசாரணை செய்து வாக்குமூலம் பெற்றுக்கொண்டார்கள். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை நான் தான் போலிசாரிடம் கூறினேன். ( **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் நீதிமன்றத்தில் முன் விசாரணையில் சொன்ன சங்கதிகளை தான் போலிசார் விசாரணையில் சொன்னேன் என்றால் சரிதான். எதிரிகள் என்னை அடித்த சம்பவங்கள் எனது வீட்டிற்குள் நடந்தது என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்லியது போல் வளர்மதி எனது வீட்டிற்கு வந்து 1,2 எதிரிகளை ஏன் இவ்வாறு செய்து கொண்டிருக்கிறாய் என்று கேட்ட விபரங்களை போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். போலிசார் என்னிடம் புகாரை எவ்வாறு பெற்றார்கள் என்றால் வாக்குமூலமாக வாங்கிக் கொண்டார்கள். புகார் வாக்குமூலத்திலும் வளர்மதி எனது வீட்டிற்கு உள்ளே வந்து எதிரிகளை கேட்ட விபரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். 2வது எதிரியுடன் 1வது எதிரி மூவலூரில் சென்று த னியாக வாழ்ந்து வந்தது சம்பந்தமாக காவல்நிலையத்தில் நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். மருத்துவமனையில் நான் சிகிச்சையில் இருந்தபோது என்னிடம் புகார் வாக்குமூலம் பெற்ற காவல்அதிகாரியின் பெயர் மற்றும் தகுதி தெரியுமா என்றால் ரகுராமன் என்பவர் ஆவார். பினாயில் குடித்துபோது எனக்கு என்ன ஆனது என்றால் மயக்கம் வந்தது. எனக்கு எப்போது சுயநினைவு வந்தது என்றால் மருத்துவமனையில் ஊசி போட்டவுடன் மயக்கம் தெளிந்தது. மருத்துவமனை போகும் போது மயக்கத்துடன் இருந்தேன் என்றால் லேசான மயக்கமாக இருந்தது. நடப்பவை எல்லாம் தெரிந்தது. மருத்துவமனையில் ஊசி போட்டவுடன் மயக்கம் தெளிந்தது. டாக்டரிடம் யார் விபரம் சொன்னது என்றால் எனக்கு தெரியவில்லை. எந்த தேதியில், எத்தனை மணிக்கு வாக்குமூலம் வாங்கினார்கள் என்றால் சரியாக ஞாபகம் இல்லை. மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். மருத்துவமனையில் நான் சிகிச்சையில் இருந்ததற்கான ஆவணங்களை போலிசார் என்னிடம் கேட்டுப்பெறவில்லை என்றால் சரிதான். ஜீவனாம்சம் கேட்டு தாக்கல் செய்த வழக்கின் ஆவணங்களை போலிசாரிடம் என்னிடம் தற்போது வரை கேட்டு பெறவில்லை என்றால் சரிதான். எதிரிகள் என்னை அடித்த போது எனது குழந்தைகள் மட்டும் வீட்டில் இருந்தார்கள் என்றால் சரிதான். எனது குழந்தைகளை இந்த வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். 1வது எதிரிக்கும் அவரது குடும்பத்திற்கும் சொத்து சம்பந்தமான பிரச்சனை நீதிமன்றத்தில் இருந்து வருகிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் OS 105/2024 என்ற வழக்கை 1ம் எதிரிக்கும் அவரது குடும்பத்திருக்கும் இடையே நடந்து வருகிறது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அதனால் தான் 1ம் எதிரிக்குசொத்து கொடுக்க கூடாது என்பதற்காக அவரது குடும்ப உறுப்பினர்களும் நானும் சேர்ந்து பொய்யாக 1வது எதிரியின் மீது புகாரை கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் பகல் 01.00 மணிக்கு பின்பு குத்தாலம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. 108 ஆம்புலன்சை யார்வரவழைத்தது என்றால் எனக்கு சுயநினைவு இல்லை என்பதால் தெரியவில்லை. எதிரிகள் இருவரும் சேர்ந்து

பெ. அனிதா

வாழ்ந்து வருவதற்கு எந்த ஆவணங்களும் காவல்நிலையத்தில் கொடுக்கவில்லை என்றால் சரிதான். தற்போது வரை போலிசாரும் கேட்டுப்பெறவில்லை என்றால் சரிதான். மருத்துவமனைக்கு என்னை அழைத்து சென்றது நாத்தனார் வளர்மதி, கோகுலகிருஷ்ணன் என்ற விபரத்தை என்னிடம் யார் சொன்னது என்றால் எனது நாத்தனார் என்னிடம் கூறினார். மருத்துவமனையில் சிகிச்சைக்கு பின்பு எத்தனை நாட்கள் கழித்து வீட்டிற்கு வந்தேன் என்றால் 5 நாட்கள் கழித்து வந்தேன். மருத்துவமனையில் இருந்து நான் நேரடியாக எங்கு சென்றேன் என்றால் நான் மருத்துவமனைக்கு சென்ற மறுநாளே 1வது எதிரி வீட்டை பூட்டிவிட்டு சென்று விட்டார். எனது மகள் வயதிற்கு வந்துவிட்டதால் எனது நாத்தனார் 1வது எதிரியிடம் வீட்டு சாவியை கொடுக்கும்படி கேட்டுள்ளார். அதற்கு 1வது எதிரி தரவில்லை என்பதால் எனது மகள் ரோட்டில் தங்கமுடியாது என்று வீட்டின் பூட்டை உடைத்து விட்டு உள்ளே சென்று விட்டார். அதனால் நான் மருத்துவமனையில் இருந்து எனது வீட்டிற்கு சென்றேன். போலிசார் விசாரணையில் மேற்படி விபரங்களை நான் சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி விபரங்களை எனக்கு யார் சொன்னது என்றால் எனது நாத்தனார் கூறினார். எதிரிகள் என்னை மனம் வருந்தும் படியாக பேசவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கு முன்பாக நான் எதிரிகள் மீது வேறு ஒரு வழக்கை கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கு எதற்காக போடப்பட்டது என்றால் என்னிடம் எதிரிகள் இருவரும் பிரச்சனை செய்ததால் புகார் கொடுத்தேன். அந்த வழக்கின் சாராம்சம் எனக்கு தற்போது நினைவில் இல்லை. அந்த வழக்கு எதிரிகள் என்னை வீட்டை விட்டு துரத்தியதால் ெ காடுத்த புகார் என்றால் சரியல்ல1 வது எதிரியின் சகோதரிக்கு திருமணம்ஆகி வெளி ஊரில் வாக்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான். 1வது எதிரி என்னுடன் திருமணம் ஆகி எவ்வளவு ஆண்டுகள் ஒன்றாக இருந்தார் என்றால் 2015 ம் ஆண்டு வரை. அதன்பிபு என்னுடன் சரியில்லாமல் வாழ்ந்தாரா என்றால் கோபப்படுவார் நான் சகித்துக்கொண்டு வாழ்ந்து வந்தேன். 1வது எதிரி என் மீது தாக்கல் செய்த விவாகரத்து வழக்கின் விபரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். 1வது எதிரியின் சகோதரர் உடன் நான் தவறான உறவில் இருந்ததால் தான் என் மீது விவாகரத்து வழக்கு போட்டார் என்றால் சரியல்ல, நான் அவர் மீது இரண்டாவது எதிரியுடன் தொடர்பில் இருப்பதை கூறி பிரச்சனை செய்ததால் என்மீது பழிசுமத்தி அந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். 1வது எதிரி தாக்கல் செய்த விவாகரத்து வழக்கு மனுவில் 1வது எதிரியின் சகோதரரும் நானும் சேர்ந்து நான் மருந்து குடித்து 1வது எதிரியை பிரச்சனையில் மாட்டி விடுவதாக கூறியதை பற்றிய விபரம் 1வது எதிரி அந்த மனுவில் சொல்லியுள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. 1வது எதிரியின் சகோதரர் சொன்னது போலவே நான் பொய்யாக நாடகம்ஆடி 1வது எதிரியின் மீது புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. விவாகரத்து வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் நான் எங்கிருந்தேன் என்றால் எனது அம்மா வீட்டில் இருந்தேன். அந்த வழக்னை நாகப்பட்டினம் குடும்ப நல நீதிமன்றத்திற்கு மாற்றக்கோரி நான்தான் மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த மனுவினை நாகப்பட்டினத்தில் இருந்து மயிலாடுதுறைக்கு வரமுடியாது என்று கூறிதான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் இடைக்கால ஜீவனாம்சம் கேட்டு உத்தரவாகி உள்ளது என்றால் சரிதான். இடைக்கால ஜீவனாம்சம் கேட்ட மனுவில் என்ன பயன்பாட்டிற்காக ஜீவனாம்சம் தேவைப்படுகிறது என்று கேட்டுள்ளேன் என்றால் உணவு , உடை மற்றும் குழந்தைகளின் கல்விக்காக கேட்டுள்ளேன். அந்த வழக்கில் எனக்கு 1வது எதிரி ஜீவனாம்சம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். 1வது எதிரியுடன் பிரிந்து வாழ்ந்த வந்த போது நீதிமன்ற உத்தரவு பெற்று 1வது எதிரியின் வீட்டிற்கு வந்தேனா என்றால் வந்தேன். எனது அம்மா வீட்டில் ரொம்ப காலம் இருக்கமுடியாது என்பதால் மனைவி என்ற அந்தஸ்தில் நான் 1வது எதிரியின் வீட்டிற்கு வீட்டை உடைத்து விட்டு உள்ளே சென்றேன். அதன்

ஏ. அனிதா.

காரணமாக என் மீது 1வது எதிரி புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் சிசி எண் 29/2025 என்று நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கினை 2வது எதிரிக்கு 1வது எதிரி பவர் கொடுத்து நடத்தி வருகிறார் என்றால் சரிதான். 2வது எதிரியை நானும், குமரன், தேவி, கிஷோர் ஆகியோர் வீடு புகுந்து அசிங்கமாக திட்டி அடித்தது சம்பந்தமாக குத்தாலம் காவல் நிலையத்தில் 448/2022 என்று வழக்கு பதிவு செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் STC.No.534/2022 என்று நம்பராகி அந்த வழக்கின் முடிவில் கடந்த 05.09.2023 ம் தேதி 1வது எதிரியாகிய என்னை குற்றவாளி என முடிவு செய்து தண்டப்பணம் ரூ.2,500/- செலுத்தி உள்ளேன் என்றா'ல சரிதான். என்னுடன் சேர்ந்த மற்ற குற்றவாளிகளுக்கும் தண்டத்தொகை விதிக்கப்பட்டது என்றால் சரிதான். 1வது எதிரி வெளி நாட்டில் இருந்தபோது குத்தாலம் காவல் நிலைய குற்ற எண் 412/2022 என்ற குற்ற எண்ணில் லுக்அவுட் நோட்டீஸ் கொடுத்தேன் என்றால் சரிதான். குத்தாலம் காவல் நிலைய குற்ற எண் 118/2025 லில் 1வது எதிரி 10 நாட்கள் நீதிமன்ற காவலில் இருந்தார் என்றால் சரிதான். நானும் 1வது எதிரியின் குடும்பத்தாலரும் சேர்ந்து 1வது எதிரியை வீட்டிற்குள் விடக்கூடாது என்பதற்காக பொய்யான புகாரை அடுத்தடுத்து கொடுத்து வருகிறோம் என்றால் சரியல்ல. 1வது எதிரியுடன் சேர்ந்து வாழ வேண்டும் என்று நீதிமன்றத்தில் எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். குத்தாலம் காவல் நிலைய குற்ற எண் 386/2025 1வது எதிரியின் சகோதரர் குமரன், அவரது மகன் மாதவன் மற்றும் என்மீதும் 1வது எதிரியின் வீட்டை அடித்து உடைத்ததற்காக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கில் நான் முன்பிணை பெற்றுள்ளேனா என்றால் இல்லை. கூடுதல் சார்பு நீதிமன்றம் மயிலாடுதுறையில் அசல்வழக்கு எண் 105/2023 ல் பிரதிவாதியாக ஆஜராகிவிட்டு வீடு திரும்பியபோது நானும் .கோகுலகிருஷணன், பவானி, கிஷோர்இ தேவி, அனுராதா ஆகியோர் ஒன்று சேர்ந்து அடித்தது சம்பந்தமாக குத்தாலம் காவல் நிலைய குற்ற எண் 120/2025 என்று பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கிலும் நான் முன்பிணை பெறவில்லை என்றால் சரிதான். 1வது எதிரி மீது டிவிசி வழக்கு 21/2025 ல் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கில் 1வது எதிரி என்னை அடித்து கொடுமைப்படுத்தியதற்காக அவரை தண்டிக்க வேண்டும் என்று பரிகாரம் கேட்டுள்ளேனா என்றால் இல்லை. அந்த வழக்கில் 1வது எதிரி வீட்டை சுற்றியும் கேமரா வைத்து என்னையுைம் எனது குழந்தைகளையும் கண்காணித்து வருகிறார் என்று சொன்னால் சரிதான். அந்த கேமராவில் பார்த்தால் நான் பினாயில் குடித்தது தெரிய வரும் என்றால் சரிதான். அந்த கேமராவை நான் உடைத்து விட்டேன் என்றால் நான் உடைக்கவில்லை நாங்கள் குல தெய்வ கோவிலுக்கு சென்றிருந்த சமயத்தில் 1வது எதிரி வீட்டிற்கு வெளியே வந்து வீட்டை சுற்றியுள்ள பைப் போன்றவற்றை உடைத்து விட்டார். எனது பெரியமகள் அவரசமாக வீட்டிற்கு வெளியே பாத்ரூம் செல்வதற்கு கூட 1வது எதிரி தடை ஏற்படுத்தி வைத்திருந்ததால் அந்த கோபத்தில் அந்த கேமரா வைத்துள்ளதால் தான் 1வது எதிரி இவ்வாறு செய்து வருகிறார் என்று அதனை உடைத்து விட்டார். நான் பினாயில் குடித்ததாக நாடகம் ஆடியதை போலிசார் கண்டுபிடித்து விடுவார்கள் என்பதால் அதனை உடைத்து விட்டேன் என்றால் சரியல்ல. 1வது எதிரிக்கும் எனக்கும் நடந்த திருமணம் நிச்சயிக்கபட்ட திருமணம் என்றால் சரிதான். 1வது எதிரி வெளிநாட்டில் வேலை பார்த்து சம்பாதித்து வந்ததால் தான் எனது பெற்றோர் அவருக்கு திருமணம் செய்து வைத்தார்கள் என்றால் சரிதான். அதன் பின்பு 1வது எதிரி வெளி நாட்டிற்கு சென்று விட்டார் என்றால் போவதும் வருவதுமாக இருந்தார். கடைசியாக எப்போது இந்தியாவிற்கு வந்தார் என்றால் ஞாபகம் இல்லை. நான் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் சம்பவம் நடக்கவில்லை என்றாலும் நான் திட்டம் போட்டு காவல் துறையினரின் உதவியோடு 1 மற்றும் 2 எதிரிகளுக்கு எதிராக பொய்யான

ப. அனிதா.

வாக்குமூலம் பெற்று நீதிமன்றத்தில் பொய் சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1வது எதிரியை அவரது வீட்டிற்குள் விடவிடாமல் செய்ததால் என் மீதும் மற்ற நபர்கள் மீதும் தனிப்புகார் கொடுத்து நடத்தி வருகிறார் அதிலிருந்து தப்பிப்பதற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் வைத்து வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல. இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க நான் வராமல் இருந்ததால் பிடி ஆணை பிறப்பிக்கப்பட்டு சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல.

அ. அனிதா.

[illegible] எழுதிக் கொள்ளப்பட்டு, எதிர்
பின் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக்
காட்டப்பட்டு அவரால் சரியானதென்று
ஏற்கப்பட்டது.

[illegible]
மயிலாடுதுறை.